# நீங்கள் தனித்து விடப்படுவதில்லை!

இந்த உலகத்திலே மனப் போராட்டங்கள் இல்லை என்று எந்த மனிதனால் கூற முடியும்? நாளாந்த வாழ்க்கையிலே மனிதர்கள் ஒன்றின்பின் ஒன்றாக பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். சிலர் அது வாழ்க்கையின் நியதி என்றும், வேறு சிலர் பலவிதமான கருத்துக்களைக் கூறிக் கொள்வார்கள். கருப்பொருளாவது, வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு. ஆனால், உலகத்திலுள்ள மனிதர்கள் அதை மேற்கொள்ளுவதற்கு அல்லது அதை கடந்து செல்வதற்கு பற்பல வழிமுறைகளை கையாளுகின்றார்கள். அவைகளில் சில உலக போக்கிலே வாழ்பவர்களுக்கு நீதியாக தோன்றுகின்றது. ஆனால், விசுவாசிகளாகிய நாம் இந்த உலக போக்கின்படி போராட்டகளை நடத்த முடியாது. மாம்ச சிந்தையானது தேவனுக்கு விரோதமான பகையாக இருக்கின்றது. எனவே விசுவாசிகளாகிய, ஒருவேளை சில அணுகு முறைகள், இந்த உலக போக்கிற்கு நீதியாக எண்ணப்பட்டாலும், நாம் மாம்சத்திலே போராடாமல், ஆவிக்குரிய யுத்தத்தை நடத்த வேண்டும் என்பதைக் குறித்து கடந்து நாட்களிலே தியானித்தோம். அன்று பிலிப்பி சபையிலே இருந்தவர்களுக்கு போராட்டங்கள் இருந்தது. அதைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் அவர்களுக்கு எழுதும் போது, முதலாம் அதிகாரத்தின் முடிவில்: “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர்நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு.” கூறியிருக்கின்றார். அப்படியானால், முடிவில்லாத போராட்டங்களை எப்படி மேற்கொள்வது? தனித்திருந்து ஆவிக்குரிய யுத்தத்தை நடத்த வேண்டுமோ? ஆறுதல் அடைய வழியில்லையோ? நெருக்கங்களின் மத்தியிலே நம்மிடத்தில் பட்சமாக நடப்பதற்கு யாருமில்லையா? பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கையானது தனித்து வாழும் வாழ்க்கையல்ல. நமக்கு மேலான தெய்வீக ஐக்கியம் உண்டு. அந்த மேலான ஐக்கியத்தின் வழியாக சபை ஐக்கியம் உண்டு. இவைகளை தேவ ஆவியானவர் தாமே நமக்குள் நடப்பிக்கின்றார். “அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.”

**ரோமர் 8:26**

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்.

**ஜெபம்:** போராட்டங்களிலே என்னோடு கூட இருந்து என்னை வழிநடத்தும் தேவனே, நான் உபத்திரவங்களிலே சோர்ந்து போகாமல் உம் வார்த்தையை பற்றிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சாட்சியின் நற்கிரியைகள் எங்கே?

**பிலிப்பியர் 2:2**

**நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.**

விசுவாச வாழ்க்கையிலே இதுவரைக்கு எத்தனை போராட்டங்களை சந்தித்திருக்கின்றீர்கள்? அவைகள் யாரால் உண்டானது? அவற்றுள் சில உங்களால் உண்டாகவில்லையா? சில வேளைகளிலே நான் தண்டனைக்கு பாத்திரன் என்று உங்கள் மனசாட்சி கூறவில்லையா? என் தவறான தீர்மாகங்களினாலேயே தோல்விகள் உண்டாயிருந்தது என்று அறிந்த நாட்கள் உண்டல்லவோ? சற்று சிந்தித்துப் பாருங்கள்! அப்படிப்பட் சூழ்நிலைகள் மத்தியிலே, எப்படி நமக்கு ஆறுதல் உண்டாகின்றது? எந்த அன்பினாலே நமக்கு தேறுதல் கிடைகின்றது? எந்த ஆவியினாலே ஐக்கியம் உண்டாகின்றது? தண்டனைக்கு தப்பும்படி யாரால் உருக்கமான பட்சமும் இரக்கமும் உண்டாகுகின்றது? ஆதரவற்ற நாட்களிலே கிறிஸ்துவுக்குள் ஆறுதல் உண்டாகவில்லையா? தேவ அன்பு வெளிப்படவில்லையா? ஆவியானவர் வழியாக ஐக்கியம் கட்டப்படவில்லையா? தேவன் தாமே உங்களுக்கு மனதுருகி, பட்சத்தோடு தன் இரக்கங்களை உங்களுக்கு காட்டினதுண்டோ? தரித்திருந்து சிந்தியுங்கள்! கடந்து வந்த பாதையை சற்று திரும்பிப் பாருங்கள்! இப்படியாக உங்களுக்கு சம்பவித்ததுண்டானால், இவைகள் உங்கள் அனுபவ சாட்சியானதுண்டானதானால், அவற்றை வெளிக்காட்டுங்கள். உங்கள் பேச்சிலும், வாயின் அறிக்கையிலும், மற்றவர்களுக்கு கூறும் உபதேசத்திலும் மாத்திரமல்ல, செய்கையிலே, வாழ்க்கையின் நடைமுறையிலே, விசுவாசத்தின் கிரியைகளிலே காண்பிக்கப்பட வேண்டும். மேலான தெய்வீன ஐக்கியத்தினால் உண்டானவைகளை, சபை ஐக்கியத்திலே காண்பியுங்கள். பிதாவாகிய தேவனுடைய அநாதி தீர்மானம் நிறைவேற வேண்டும். ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும். எனவே, கிருபையும், இரக்கமும் எனக்கு மட்டும் தான் என்று வாழாமல், சபையிலே, சக விசுவாசிகள் மத்தியிலே உங்களுக்கு உண்டான மேன்மையான ஐக்கியத்தை நற்கிரியைகள் வழியாக காண்பியுங்கள். "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்."

**ஜெபம்:** சகல விதமான ஆறுதலின் தேவனே, நான் உம்மிடம் பெற்றுக் கொண்ட உருக்கமான இரக்கங்களை என் சாட்சி வழியாக மற்றவர்களுக்கு வெளிப்பட்டும் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம்பிக்கையிலே உறுதியாயிருங்கள்

ரோமருடைய ஆட்சிக் காலத்திலே, தேவ ஊழியராகிய பவுல், ஆசியாவிலே இருந்த நாட்களிலே பெரிதான உபத்திரவம் உண்டாயிற்று. தற்போது துருக்கி நாடு இருக்கும் ஒரு பகுதியானது, ஆசியா என்று அழைக்கப்பட்டது. இப்போது துருக்கி பட்டணமானது, தற்போதுள்ள ஆசியா கண்டத்தின் மேற்கு பகுதியாகவும், ஐரோப்பியா கண்டத்தின் தெற்கு பகுதியாகவும் கருதப்படுகின்றது. உயிர் பிழைப்பார் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, அவர்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் பவுலுக்கும் அவரோடு ஊழியம் செய்தவர்களுக்கும் உண்டாயிற்று. அப்பபடிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையிலே, தங்களுக்கு ஆதர வாக இருக்கும் சக ஊழியர்களை தொடர்கொண்டு, தங்களுக்காக வேண்டிக் கொள்ளும்படி கூறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாதிருந்தது. அந்த வேளையிலே, அவர்கள் தங்கள் பலத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தார்கள். இந்த பூவுலகத்தைவிட்டு கடந்து செல்லும் மரணம் வருமென்று அவர்கள் தங்களுக்குள்ளே நிச்சயித்திருக்கத்தக்காக அவர்களுடைய வருத்தம் பயங்கரமாக இருந்தது. அப்படிப்பட்ட மரணத்தினின்றும் தேவனாகிய கர்த்தர்தாமே அவர்களை தப்புவித்தார். ஆதலால், அவர் தன்னுடைய விசுவாசத்தை தைரியத்தோடு அறிக்கை செய்தார். அதாவது, "எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்." என்று திடமனதோடு அறிக்கை செய்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய நாட்களிலே, நவீன தொலை தொடர்பு சாதனங்கள் விசுவாசிகளுடைய கரங்களிலே உண்டு. அதன் வழியாக, நினைத்த நேரம், தங்களுக்கு வேண்டிய பிரகாரமாக மற்றவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். அப்படியிருந்தும், சில விசுவாசிகள் மனிதர்கள் மேல் நம்பிக்கையாக இருப்பதினாலேதங்கள் உபத்திரவத்திலே தளர்ந்து போய்விடுகின்றார்கள். நீங்கள் அப்படியிருக்காமல், தேவனுடைய பாதத்திலே ஜெபத்திலே அமர்ந்திருங்கள். மற்றவர்களோடு அதிக சம்பாஷணைக்கு இடம் கொடுக்காமல், வேதத்தை வாசித்து, வாக்குத்தத்தங்களை அறிக்கையிடுங்கள். "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே."

**2 கொரிந்தியர் 1:20**

**எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.**

**ஜெபம்:** பரலோக தேவனே, உபத்திரவங்களிலும், நோய்களிலும் மனிதர்களின் அறிவையோ, அவர்களுடைய பேச்சையோ நம்பியிருக்காமல், உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருக்கத்தக்கதாக எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆறுதலை பெருகப்பண்ணுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்த விசுவாசியானவன், தன் இள வயதிலேயே சில பாடுகளுக்கு ஊடாக செல்ல வேண்டியதாயிருந்தது. நெருக்கடியின் காலங்களிலே, அதிலிருந்து வெளியேறுவதற்கு எந்த வழியும் இல்லாதிருந்தது. பல ஆண்டுகள் கடந்து சென்ற பின்பு, அவன் தன் வாழ்க்கையை திரும்பி பார்க்கும் போது, எப்படியாக, அந்த உபத்திரவங்கள் யாவற்றிலுமிருந்து தேவன் தாமே தன்னை காத்து, விடுவித்து, வெற்றி கொடுத்தார்என்பதை சிந்திக்கும் போது, அவன் தேவனாகிய கர்த்தருடைய வழிநடத்துதலின்மேன்மையை குறித்து ஆச்சரிப்பட்டான். அதனால், அவன் தன்னைப் போல பாடுகளுக்கூடாக கடந்து செல்லும் மற்றவர்களை திடப்படுத்த ஆரம்பித்தான். தான் பெற்றக் கொண்டு தேவனுடைய கிருபையையும், அவருடைய உருக்கமான இரக்கத்தையும், மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி கிரியைகளை நடப்பித்தான். ஆம் பிரியமானவர்களே, தேவ நன்மையை பெற்றிருந்தால், அதை உங்கள் வாழ்விலே காண்பிக்க ஆரம்பியுங்கள். “நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும் நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும் நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது. நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிநஉ, உங்களைக் குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்.” என்று 2 கொரிந்தியர் 1ம் அதிகாரம், 3ம் வசனத்திலிருந்து 7ம் வசனம் வரை வாசிக்கின்றோம். எனவே, உங்கள் அனுபவ சாட்சிகள் உங்கள் வாழ்க்கையில் கிரியைகள் வாயிலாக வெளிப்படுத்தப்படட்டும். மற்றவர்கள் நன்மையடைய வேண்டும் என்கிற சிந்தை வளரட்டும்.

**2 கொரிந்தியர் 1:5**

எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல,கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

**ஜெபம்**: ஆறுதலின் தேவனே, என்னுடைய பாடுகளில் எப்படி கிறிஸ்துவின் ஆறுதல் பெருகுகின்றதோ, அதே பிரகாரமாக மற்றவர்களுடைய வாழ்விலே நான் ஆறுதலிக்கின்றவனாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏக சிந்தை, ஏக அன்பு

"ஏக சிந்தை, ஏக அன்பு , இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்தல்", போன்றவை விசுவாசிகள் மத்தியிலே காணப்பட வேண்டும் என்று தேவ ஊழியராகிய பவுல், என்று கூறியிருக்கின்றார். விசுவாசிகள், எதைக் குறித்து ஏக சிந்தையும், ஏக அன்பும், இசைந்த ஆத்துமாக்களுமாக இருக்க வேண்டும்? இன்று குடும்பங்களிலே, சபைகளிலே, தரிசனம் என்ற தலைப்பின் கீழ், பற்பல நற்கிரியைகளை காரியங்களை நடப்பித்து வருகின்றார்கள். கிறிஸ்துவை அறியாத உலகத்தார் மத்தியிலும், பல ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டு, அத்தகைய நற்கிரியைகளை பெரும் அளவிலே செய்து வருகின்றார்கள். அவர்கள் தாங்கள் தங்கள் கனவுகளையும், அபிலாஷைகளையும் பின்பற்றுகின்றோம் என்று சொல்லிக் கொள்வார்கள். இந்த உலகத்திலே வழக்கத்திலுள்ள பழமொழியைப் போல "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கமைய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் இருக்கும் இடத்திலே செய்யப்படும் காரியமானது வாய்க்கும் என்பதை பொதுவாக யாவரும் அறிந்திருக்கின்றார்கள். உலகத்தின் போக்கிலே நடப்பவர்கள் கூட, கூடிவரும் போது, வாக்குவாதங்கள், விவாதங்களை தவிர்த்து, தங்கள் கூடுகையின் நோக்கத்திலே கவனம் செலுத்திக் கொள்கின்றார்கள். காரியம் அப்படியானால், தேவ சபையானது கூடி வரும் போது, எவ்வளவு கனத்தோடு நாம் காரியங்களை நடப்பிக்க வேண்டும் என்பதை சிந்தித்து பாருங்கள். ஒரு காரியத்தைக் குறித்த ஒருமைப்பாடு, ஒற்றுமை நல்லது. நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதே, விசுவாசிகள் நடப்பிக்கும் கிரியைகளின் பிரதான இலக்காக காணப்பட வேண்டும். சபையின் எல்லையை விஸ்தரிப்பதால், தேவ சித்தம் நிறைவேறுகின்றது என்று கூறிவிட முடியாது. தங்கள் வாசல்களை வழியை விசாலமாக்கிக் கொள்கின்றவர்களிடத்தில் அநேகர் சேர்ந்து கொள்கின்றார்கள். வசுவாசிகள் மத்தியிலே ஏக சிந்தையும், ஏக அன்பும், ஒன்றையே சிந்திப்பதும் இருக்கும் போது, அவர்கள் தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கும்படிக்கான ஆயத்தம் உண்டாயிருக்க வேண்டும். தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே, விசுவாசிகள் மத்தியிலே ஒருமனமும் ஒற்றுமையும் காணப்பட வேண்டும்.

**மத்தேயு 6:10**

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

**ஜெபம்:** பரலோக தேவனே, எப்போதும் உம்முடைய சித்த த்தைக் குறித்த சிந்தையுடையவர்ளாக காணப்பட எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே என் னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சகோதரரை ஸ்திரப்படுத்துங்கள்

**லூக்கா 22:32**

**நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.**

பெற்றோர் பலமுறை அறிவுரை கூறிய பின்பும், சைக்கிளை அதி வேகமாக ஓட்டிச் சென்ற வாலிபனொருவன், கட்டுபடுத்த முடியாமல், ஒரு குழியிலே விழுந்துவிட்டான். அதனால், அவனுக்கு சரீரத்திலே சில காயங்கள் ஏற்பட்டுவிட்டது. பெற்றோர் அவனைக் கடிந்து கொள்வதற்கு முன்னதாக, அவனுக்கு காயங்கட்டினார்கள். சரீரத்திலே பெரிதான காயங்கள் இல்லை, அவனுக்கு உயிர் ஆபத்து ஏற்படவில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி கூறினார்கள். சில ஆண்டுகளுக்கு பின்னர், அவனுடைய இளையசகோதரன் அவ்விதமாக சைக்கிளை ஓட்டிச் சென்று இன்னுமொரு வாகனத்தோடு மோதி அடித்துவிட்டான். அதனால், அவனுக்கு சரீரத்திலே காயங்கள் ஏற்பட்டது. இந்த நிலையிலே, நீங்கள் அவர்களின் பெற்றோராக இருந்தால், அவனுடைய மூத்த சகோதரன் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்பீர்கள்? குறைந்த பட்சம், அவன் தன் தம்பியின் பரிதாபமான நிலையைக் குறித்து உணர்ந்து செயற்பட வேண்டும் என்று எண்ணுவீர்களல்லவா? இவ்விதமாகவே, கிழமைக்கு கிழமை நாம் தேவனுடைய வார்த்தைகளை நாம் கேட்கின்றோம். வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு தியானிக்கின்றோம். ஆனால், சில வேளைகளிலே, வாழ்க்கையின் நடைமுறை சம்பவங்களிலே எங்களுடைய மதியீனத்தினாலே தவறி விடுகின்றோம். மனம் வருந்தும் போது, தேவன் அதை மன்னிக்கின்றார். சிலர் எங்களுக்காக ஜெபிக்கின்றார்கள். இன்னும் சிலர் நாங்கள் பெலனடைய வேண்டும் என்று உற்சாகப்படுத்துகின்றார்கள். நாளடைவில் நாங்கள் குணமடையின்றோம். இந்த சம்பவங்களின் மத்தியிலே ஒருசிலர், வேதனையை கூட்டும்படி, நகைக்கின்றார்கள். வீண்பேச்சிகளை பேசி தூற்றித் திரிகின்றார்கள். பிரச்சனைகளை பெரிதாக்கிவிட முயற்சிக்கின்றார்கள். இப்படியான சம்பவங்கள் விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே நடைபெறுகின்றதல்லவா? நீங்கள் ஆறுதல் அடைந்த பின்பு, நீங்கள் தேற்றப்பற்ற பின்பு, நீங்கள் தவறிய பிரகாரமாக, இன்னுமொருவர் தறவறும் போது, நீங்கள் என்ன செய்யவீர்கள்? பிரியமானவர்களே, நாம் இந்த உலக நீதியை பின்பற்றாமல், நாம் தேவனுக்கேற்ற கனிகளை கொடுக்கின்றவர்களாக இருக்க வேண்டும். இவ்விதமாய், பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதா மகிமைப்படும்படி, எங்கள் நற்கிரியைகள் காண்பிக்கப்பட வேண்டும்.

**ஜெபம்:** மேலானவைகளை நாடும்படிக்காய் என்னை அழைத்த தேவனே, நற்கனிகளைக் அதன் காலத்திலே கொடுக்கும் மரங்களைப்போல நானும் இருக்கும்படி, நீர் என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனத்தாழ்மையோடு சேவியுங்கள்

பிலிப்பி சபையோர் மத்தியிலே பல நற்பண்புகள் இருந்தது. அவர்கள் சிலர் சுவிசேஷத்திற்காக பிரயாசப்பட்டவர்கள். ஆனால், அவர்கள் மத்தியிலே பிரிவினைகளும் இருந்தது. இந்த நிரூபத்தின் ஆரம்பத்திலே, தன்னுடைய நிலைமையைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் எழுதும் போது, "சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்." என்று குறிப்பிட்டிருந்தார். அதாவது, சிலர் தவறான எண்ணத்தோடு, போட்டி பொறாமையோடு, நன்மைகள் செய்ய நாடினார்கள். அப்படிப்பட்ட மனநிலையானது பிலிப்பு சபையோர் மத்தியிலும் காணப்பட்டது.வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது, நன்மையானவைகளை செய்யாமல், மனத்தாழ்மையோடு நற்கிரியைகளை நடப்பிக்கும்படி புத்தி சொல்லியிருக்கின்றார். ஏனெனில், வன்மம், கசப்பு போன்ற மாம்ச சிந்தைகள், பிரிவினையை உண்டாக்கும். பிரிவினையானது கலகங்களையும், சண்டைகளையும் பிறப்பிக்கும். எனவே, போராட்டங்களை பற்றி அறிந்த நீங்கள், அவைகள் உள்ளே இருந்து உடன் விசுவாசிகளால் வந்தாலும், வெளியேயிருந்து உலகத்தாரால் வந்தாலும், ஒருமனத்தையும், ஒற்றுமையையும் விட்டுவிடக்கூடாது. சரீரத்திலே அநேக அவயவங்கள் உண்டு. அவையொன்றிற்கும் வெவ்வேறான செயற்பாடுகள் இருக்கின்ற போதும், அவை ஒருமித்து செயற்படாதவிடது, அதை ஆரோக்கியமான சரீரம் என்று கூற முடியாது. குறைகளை காணும் போது, கிறிஸ்துவின் ஆறுதலையும், தேறுதலையும், உருக்கமான இரக்கத்தையும் பற்றி அனுபவித்த நீங்கள், அதை உங்கள் சக விசுவாசிகளுக்கு காண்பியுங்கள். பாரங்களோடு இன்னும் பாரங்களை ஏற்றாமல், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும். நான் ஆளும் கட்சி, அவன் எதிர்கட்சி என்ற பிரகாரமாக கிறிஸ்துவின் சபையானது இருக்கக் கூடாது. பக்கச்சார்பில்லாமல், யாவரும் கிறிஸ்துவை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவை சார்ந்தவர்கள், அவருடைய சாயலிலே வளரவேண்டும். நம்முடைய ஐக்கியமானது, உலக கொள்கைகளின்படியல்ல, பிதா குமாரன் வழியாக ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே, வேறுபட்ட மனநிலைகளை களைந்துவிட்டு, வார்த்தையிலே நிலைத்திருந்து, அழைப்பின் நோக்கத்தை மறந்து போகாமல், முன்னேறிச் செல்லக்கடவோம்.

**1 யோவான் 1:3**

எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.

**ஜெபம்**: வார்த்தையிலே நிலைத்திருங்கள் என்று கூறியே தேவனே, உம்முடைய வேதத்தை இந்த உலகத்தின் கண்களால் பார்க்காமல், ஆவிக்குரிய கண்களால் பார்க்க பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | பங்குனி 8

📖 மாலை வாசகம் – கொலோ 4:17

# அநாதி தீர்மானமே இலக்கு!

உலகிலே இயங்கி வரும் வியாபார நோக்கையுடைய ஸ்தாபனங்கள், எப்போதும் தங்களை ஒத்த வியாபாரம் செய்யும் மற்றய ஸ்தாபன ங்களின் செயற்பாடுகளை கவனமான கண்காணித்துக் கொண்டிரு ப்பார்கள். போட்டியாளர்கள் ஒரு இடத்திலே குறிப்பிட்ட வியாபாரத்தை ஆரம்பித்தால், உடடினடியாக தாங்ளும் அதற்குரிய நடடிவடிக்கைகளை எடுப்பார்கள் அல்லது அவர்கள் குறிப்பிட இடத்திற்கு போவதற்கு முன் னர் தாங்கள் சென்று விடுவார்கள். போட்யாளர்கள் மத்தியிலே அரசா ங்கத்தினால் விதிக்கப்பட்ட வியாபார நீதி நெறி முறைகள் உண்டு. அவ ற்றை பின்பற்றி கொண்டு, எப்படி யாவது தங்களுடைய ஸ்தாபனமா னது, தங்கள் எஜமானனுக்கு ஆதா யத்தை பெருக்கிக் கொள்ள வேண் டும்என்று இலாப நோக்குடன் பிரயாசப்படுகின்றார்கள். ஆனால், நாமோ ஒரே எஜமானாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கின்றோம். பிதாவாகிய தேவனுடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றுவதே நம்முடைய ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். சில சமயங்களிலே தேவனாகிய கர்த்தர்தாமே, சிலரை பிரத்தியேகமான நோக்கத்திற்காக பிரித்தெடுத்து அவர்களை சில இடங்களுக்கு அனுப் புகின்றார். அவர்கள் எதிர்நோக்க வேண்டிய சவால்கள் யாவற்றையும் மேற்கொள்ள அவர்களுக்கு வேண்டிய தலாந்துகளையும் வரங்களை யும் அவர்களுக்கு ஈவாக கொடுககின்றார். அந்த வேளையிலே, தேவ னுடைய அழைப்பை பெறாத வேறு சிலர், போட்டி மனப்பான்மை யோடு, தாங்கள் அந்த இடத்திற்கு முந்தி செல்ல வேண்டும் என்று, தங்கள் சுய இஷ்டப்படி அங்கு சென்று, காரியங்களை நடப்பிக்க முயற்சி செய்யும் போது, வேண்டப்படாத பிரச்சனைகளையும், தடைக ளையும், குழப்பங்களையும் ஏற்படுத்தி விடுகின்றார்கள். இதைக் குறி த்து விசுவாசிகள் உணர்வடைய வேண்டும். ஊழிய சம்பந்தமான காரி யங்கள் மட்டுமல்ல, விசுவாசிகளுடைய வாழ்விலே, கல்வி, வேலை, வீடு, சொத்துகள், விடுமுறை என்று போட்டி மனப்பான்மையோடு வாழக்கூடாது. அவர் இப்படி செய்கின்றார், எனவே நாங்களும் அப்படி செய்ய வேண்டும் என்கிற மனப்பான்மை வாழ்விற்கு நல்லதல்ல. எல்லாவற்றிலும், விசுவாசிகள் தங்கள் பிரதானமான நோக்கத்தை மறந்து விடக்கூடாது. நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்டவர்கள், நோக்க இழந்து, தேவ சித்தத்திற்கு விரோதமாக செயற்படக்கூடாது..

**1 கொரிந்தியர் 10:31**

எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று அழைத்த தேவனே, வார்த்தை யினாலாவது, கிரியைகளினாலாவது எதைச் செய்தாலும் உம்முடைய திருநாமம் மகிமைப்படும்படிக்கு, உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனமாற்றமும் மறுரூபமும்

ஒரு ஊரிலே உத்தமாக வாழ்ந்து வந்த மனிதனாவனொருவன் மேல், அந்த ஊரிலுள்ளவர்களில் சிலர், பாரிய குற்றமொன்றை சுமத்தினார்கள். தான் நிரபராதி என்று நிரூபிப்பது அந்த மனிதனுக்கு மிகவும் இலகுவான காரியமாக இருந்தது. ஆனால், தான் அதை செய்தால், ஊரிலே பாதாகமான பின்விளைவுகள் உண்டாகும். அங்கு நிலவும் பிரிவினையின் எண்ணங்கள் பெரிதான கலகங்களை ஜனங்கள் மத்தியிலே ஏற்படுத்தும். உண்மையாக குற்றங்களை செய்தவர்கள், பெரும் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று என்று அறிந்து, அந்த குற்றத்தை தன்மேல் ஏற்றுக் கொண்டார். எனவே, மற்றவர்களை நிரபராதிக ளாக்கும்படிக்கு தண்டனையை தாமே சுமந்து கொண்டார். இவர் தான்எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய ஆண்வராகிய இயேசு கிறிஸ்து. அவருடைய சாயலிலே வளர்ந்து பெருகும்படி அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, சில சமயங்களிலே உங்கள் குடும்பங்களிலே, சபையிலே குற்றங்கள் உங்கள்மேல் சுமத்தப்படலாம். ஒருவேளை நீங்கள் நிரபராதியாக இருக்கலாம் அல்லது நீங்கள் தான் நிரபராதி என்று நீங்களே எண்ணிக் கொள்ளலாம். நீங்கள் எடுக்கப்போகும் தீரமானம், குடும்பத்திலேயோ அல்லது சபையிலேயோ சமாதானத்தை அல்லது பிரிவினைகளை உண்டாக்கலாம். சிலர் பின்னமாற்ற வாழ்க்கைக்கு திரும்பிப்போலாம். வேறு சிலர், சத்தியத்தை சுத்தமாக பேசாதவர்களோடு நட்பாகி விடலாம் அதனால் தங்கள் ஆத்துமாக்களை கெடுத்துக் கொள்ளலாம். இந்த நிலைமையிலே நீங்கள் எதைத் தெரிந்து கொள்வீர்கள்? மாம்சதின் போராட்டத்தையா?அல்லது ஆவிக்குரிய போராட்டத்தையா? உங்களுக்குகானவைகளை நோக்குவீர்களா அல்லது பிறருக்கானவைகளை சிந்திப்பீர்களா? இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எனக்கு ஏற்படவில்லை என்று ஒரு விசுவாசி கூறிக்கொள்வானானால், அவன் எங்கே நிற்கின்றான் என்பதை அவன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளை நாம் யாவரும் ஏதோ ஒரு விதத்திலே சந்தித்திருக்கின்றோம். இனிமேலும் சந்திக்க நேரிடலாம். பிரியமானவர்களே, தபசு நாட்கள் என்று இன்று பலர், மீட்பர் இயேசுவின் பாடுகளை நினைவுகூரும்படி, பல வெளிப்படையான தானதர்மங்களையும், ஒறுத்தல்களையும், தியாகங்களையும் செய்து வருகின்றார்கள். நல்லது! ஆனால், மனமாற்றம் வேண்டாமா? கிறிஸ்துவின் சிந்தை வேண்டாமோ? சிந்தியுங்கள் செயற்படுங்கள். தேவ ஆவியானவர்தாமே உங்களுக்கு துணை செய்வாராக.

**பிலிப்பியர் 2:6**

**அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.**

**ஜெபம்:** நித்தியமானவைகளை தேடுங்கள் என்று கூறிய தேவனே, தவறான உபதேசங்களினாலே நான் வழிதவறிப் போய்விடாதபடிக்கு, உம்முடைய சத்தியத்திலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதை செய்து காட்டுகின்றீர்கள்?

“முதலாவதாக நானும் என் குடும்பமும். மற்றவர்களுடைய காரியங்களை பார்க்க முன்பு, என் பிள்ளைகளுடைய காரியங்களை பார்க்க வேண்டும்” இப்படியாக விசுவாசிகள் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். சொந்த குடும்பத்தையும் பிள்ளைகளையும் விசாரிக்க வேண்டும் என்பது உண்மை. மற்றவர்களுக்கு உதவி செய்ய உங்களை கவனைத்தை செலுத்த முன்பு, எந்த அளவிற்கு உங்கள் சொந்த குடும்பத்தை விசாரிக்க போகின்றீர்கள்? உங்கள் பிள்ளைகளைவிட அதிகமாக அடிப்படைத் தேவைகளோடு இருக்கும் திக்கற்ற பிள்ளைகளை ஆதரிக்க முன்பதாக, எவ்வளவு காலம் பிள்ளைகளுடைய விவகாரங்களை கவனிக்கப் போகின்றீர்கள்? சற்று சிந்தித்துப் பாருங்கள்! பெற்றோர் எதை கூறுகின்றார்கள் என்று பார்த்தை அதை செய்வதைவிட அதிகமாக, பெற்றோர்கள் எதை செய்து காட்டுகின்றார்கள் என்பதையே பிள்ளைகள் கவனிக்கின்றார்கள். “பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.” என்று நீதிமொழிகள் 22ம் அதிகாரம் 6ம் வசனத்திலே வாசிக்கின்றோம். அவனவன் தனக்கானவைகளை மட்டும் நோக்காமல், பிறருக்கானவைகளையும் நோக்க வேண்டும் என்பதை எப்போது உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடு த்து, நடைமுறையிலே செய்து காண்பிக்கப் போகின்றீர்கள்? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை எந்த வயதிலே பிள்ளைகளுக்கு சொல் லிக் கொடுக்கப் போகின்றீர்கள்? பிள்ளைகளை விசாரிப்ப தென்பது, அவர்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் அறிந்து அவை களை அவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதா? எதை பிள்ளைகளின் வாழ் விலே நீங்கள் முக்கியத்துவப் படுத்துகின்றீர்களோ அவர்கள் அதையே பற்றிக் கொள்வார்கள். எனவே, சிறியவயதிலிருந்து, மேலானவைகளை நாட கற்றுக் கொடுங்கள். இந்தப் பூமிக்குரியவைகளையல்ல, பரலோகத்தி ற்குரியவைகளை நாடித் தேடி அதைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று முதலாவதாக பெறறோர் தங்களை மனதை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு பணம் பொருள் குறைவாக இருக்கும் போதும், நான் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் உண்மையான மனம் இருக்கும் போது, அந்தரங்கத்திலிருந்து இருதயத்தை ஆராய்ந்து அறியும் பரம பிதா, அவன் மேல் பிரியமாக இருப்பார் அல்லவோ! நிச்சயமாக பிரியமாக இருந்து, அவனுடைய சந்ததியை எல்லா வற்றியும் ஆசீர்வதிப்பார்.

**பிலிப்பியர் 2:6**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**

**ஜெபம்:** என் இருதயத்தை அறிந்த என் தேவனாகிய கர்த்தாவே, நான் பிறனுக்கானவைகளைக் குறித்து எப்போதும் கரிசணை யுள்ளவர்களாக இருக்கும் மனதை எனக்கு தந்து என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மை செய்ய நாடுங்கள்

என்னுடைய பிள்ளை அதி விசேஷ சித்தி மட்டும் பெற்றால் போதாது, இந்த ஊரிலுள்ள எல்லா மாணவ மாணவர்களைவிட அதிக புள்ளியை எடுக்கும்வரைக்கும், அவனை இரண்டல்ல, மூன்று டியூஷன் வகுப்புக்கு அனுப்பி வைப்பேன் என்று ஒரு விசுவாசி கூறிக் கொண்டான். என்னுடைய பிள்ளை பாடசாலைக்கு சென்று நன்றாக படிக்கின்றான். நல்ல புள்ளிகளை எடுக்கின்றான். தெருவின் எதிர் பக்கத்திலே இருக்கும் பிள்ளைகள்,பாடசாலைக்கு தேவையான புத்தகங்கள், ஆடைகள் இல்லாமல் இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு கொஞ்சம் உதவி செய்வோம் என்று ஊரிலுள்ள மனிதனொருவன் கூறிக் கொண்டான். அந்த விசுவாசியினதும், இந்த மனிதனுடையதுமான மனநிலையை சற்று ஆராய்ந்து பாருங்கள். இந்த இரண்டு பேர்களிலும் நீங்கள் யார் நல் மனதுடையவன் என்று கூறிக் கொள்வீர்கள்? இவர்களில் எவன் மேல் தேவனாகிய கர்த்தர் பிரியமாக இருப்பார்? சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு கடமைகள் உண்டு! பொறுப்புக்கள் உண்டு! அதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. "ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான் அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்." இந்த சம்பத்திலே, அவ்வழியாக சென்ற ஆசாரியனுக்கும், லேவியனுக்கும், ஆலயத்திலே செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. பொறுப்புக்கள் உண்டு. அதுமட்டும் தான் அந்த ஆசாரியனதும், லேவியனதும் பொறுப்பு என்று கூற முடியுமா? பின்பு அந்த வழியாக வந்த சமாரியன் வேறு அலுவல் இல்லாமல், அந்த வழியாய் சென்றானோ? இல்லை! அவன் தன் அலுவல்களை முடித்து திரும்ப வரும்போது, மிகுதியான பணத்தை கொடுப்பேன் என்று அவனை பராமரிக்கும்படி கூறிய சத்திரத்தின் சொந்தக் காரனுக்கு கூறிச் சென்றான். பிரியமானவர்களே, நீங்கள் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றீர்கள் என்பதை மறந்து போய்விடாதிருங்கள். எப்போதும் நன்மை செய்ய நாடுங்கள்.

**1 கொரிந்தியர் 10:24**

**ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் எப்போதும் ஜீவ வார்த்தைகளின் கருப்பொருளை உணரந்து, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க பிரகாசமுள்ள கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தெய்வீக சுபாவங்கள்

ஒரு காரியலத்திலே பணிபுரிந்து வந்த தாயானவள், மதிய இடை வேளையின் போது, தன் ஒரே மகனானவனுக்கு விளையாட்டு பொருளொன்றை வாங்கும் படி சென்றிருந்தால். சற்று நேரத்திற்கு பின் அவள் காரியாலத்திற்கு திரும்பும் போது, அவள் முகபாவனை வேறுபட்டிருந்தது. அதை சக பணியாளர்கள் வினவியபோது, அவள் அழ ஆரம்பித்தாள். அவள் விளையாட்டு பொருளை வாங்கி வேலைக்கு திரும்பும் போது, தெருவோரமாக, இருந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் மடியிலே இருந்த பிள்ளையை கண்டாள். அந்த பிள்ளை இந்த தாயாளவளுடைய பிள்ளையின் வயதிற்கு ஒத்திருந்தது. தன்னால் முடிந்த உதவிளை அந்த தாயானவள் அவர்களுக்கு செய்தாள். தெருவிலே இருந்த அந்த பிள்ளையின் தோற்றம், அணிந்திருந்த உடை கண்ட போது, அந்தத் தாயானவளின் மனம் உடைந்து போயிற்று. அவர்கள் தெருவிலே இருக்கும் காரணம் எதுவாக இருந்தாலும், தன் பிள்ளைக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என்ன செய்வேன் என்று அவள், பிச்சையெடுத்துக் கொண்டிருந்து அந்த பெண்ணிற்காவும், மடியிலிருந்த பிள்ளையின் நிலைமைகாகவும் அழுதாள். இந்த நாளிலே, தெருவிலே இருந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த அந்த பெண்ணைக் குறித்தும், அவள் ஏன்? எதற்கு அந்த இடதிலிருந்து பிச்சையெடுக்கின்றாள் என்பதைக் குறித்த காரணங்களை தேடாமல், காரியாலத்திலே பணிபுரிந்து வந்த அந்த தாயாளவனின் உள்ளத்தை குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். நான் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் தேவனுடைய சுத்த கிருபை என்பதை மறந்து போய்விடக்கூடாது. எந்த காரணத்திற்காகவும், தங்கள் இருதயதம் கடினப்பட்டு போய்விடக்கூடாது என்பதைக் குறித்து ஒவ்வொரு விசுவாசியும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாங்கள் தவறுப் போகும் ஒவ்வொரு வேளையும், தேவனிடம் சேருகின்றோம். அந்த வேளைகளிலே, தேவனாகிய கர்த்தர் தாமே, காரணத்தை தேடி, மனதுருக்கத்தை காண்பிக்காவிட்டால், எங்கள் நிலைமை எப்படியாக இருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இந்த உலகிலே நடைபெறும் மனிதர்களடையஏமாற்று வேலைகளினாலே நம் இருதயம் கடினப்பட்டுப் போய்விடாதபடிக்கும், தெய்வீக சுபாவங்களை அவித்துப் போடாதப்படிக்கு, நாம் தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே அவ்வப்போது நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**புலம்பல் 3:22-23**

அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்;

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்திலே மலிந்திருக்கும் தீமைகளினாலே நான் என் இருதயத்தை கடினப்படுத்தி, உம்முடைய வார்த்தையைவிட்டு விலகிப் போகாதபடிக்கு நீர் என்னை காத்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# ஆராய்ந்து உதவி செய்யுங்கள்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன் பல ஆண்டுகளாக ஊரிலுள்ள ஏழை எளியவர்களுக்கு தானதர்மங்களை செய்து வந்தான். ஊரில் இருந்த சனமூக நிலையத்திலுள்ளவர்கள், வருடாந்தம, அவனுக்கு நிதி திரட்ட உதவி செய்வதுண்டு. குறிப்பிட்ட வருடமொன்றிலே அவன், அங்கு சென்றிருந்த போது, அங்கு வந்திருந்த நிர்வாக உறுப்பினர்களில் ஒருவன், அந்த மனிதனைப் பார்த்து "பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்று கூறி, நிதி திரட்டலில் பங்கு பெற்றாமல் சென்று விட்டான். இன்று இப்படியாக சில விசுவாசிகளும் அவ்வப்போது கூறிக் கொள்கின்றார்கள். பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பதன் பொருள் என்ன? "இங்கு பாத்திரம் என்ற சொல் அவனது தகுதியை, நிலையைக் குறிக்கிறது. பிச்சை பெறுபவர் எத்தகையவன்? நல்லவனா? கெட்டவனா? வீண் விரயஞ்செய்பவனா? உண்மையிலேயே உடல் இயலாமையால் பிச்சை எடுக்கிறாரா? அல்லது பிச்சை பெறுபவர் பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளாரா?" என்று ஆராய்ந்து பார்த்தே பிச்சையிட வேண்டும் என்று இந்த பழமொழியை குறித்து விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள். ஆதலால், இனி தேவ பிள்ளைகளாகிய நீங்கள், ஒவ்வொரு பிச்சைக் காரணைக் காணும் போது, முதல் போய் நான் இவன் உண்மையுள்ள, இவன் சம்பூரணமான பிச்சசைக் காரணா என்று ஆராய்ந்து அறிந்து கொண்ட பின் அவனுக்கு பிச்சை கொடுப்பேன் என்று கூற முடியுமா? சகலத்தையும் நிதானித்தறியும் வழிநடத்தும் ஆவியானவரை ஈவாக பெற்றுக் கொண்டு அருமையான சகோதர சகோதரிகளே, உதவி செய்யாமல் இருப்பதற்கு காரணங்களை தேடுவதில் அதிக நேரத்தை செலவிடாமல், உண்மை மனதுடன் உதவி செய்ய நாடுங்கள். ஒருவேளை ஒருவன் அநியாயக்காரனாக இருந்து, உங்களை ஏமாற்ற முயற்சி செய்தால், ஆவியானவர் அதை உங்களுக்கு உணர்த்துவார். தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு எத்தனை நாட்களை இந்த பூமியிலே ஈவாக கொடுத்திருக்கின்றார்? எத்தனை நாட்களை நீங்கள் பிரயோஜனப் படுத்தியிருக்கின்றீர்கள்? எத்தனை நாட்களை விரயப்படுத்தியிருக்கின்றீர்கள்? உங்களுக்கு கொடுக்கப்பட்ட எல்லா பணத்தையும் நீங்கள் விரயப்படுத்தாமல் செலவு செய்திருக்கின்றீர்களா? தேவனாகிய கர்த்தர், பாத்திரம் அறிந்து பிச்சையிட்டால், நானும் நீங்களும் எங்கு இருப்போம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

**மத்தேயு 5:45**

நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.

**ஜெபம்**: தகுதியில்லா அடிமை என்னை அழைத்த தேவனே, நீர் என்மேல் வைத்த தயவு பெரியது. ஊம்முடைய இரக்கங்களினாலே நான் உயிர் பிழைத்திருக்கின்றேன் என்பதை உணரும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரட்சிப்புக்கு பாத்திரன் யார்?

ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள முதலிருந்த எங்களுடைய நிலைமை என்ன? எபேசியர் 2ம் அதிகாரம் 1ல் இருந்து 3 வரை இப்படியாக கூறப்பட்டிருக்கின்றது: "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்." அதாவது இரட்சிப்படைவதற்கேதுவாக எங்களிடம் எந்த தகுதியும் இருந்ததில்லை. அதாவது, பாதிரம அறிந்து அவர் இரட்சிப்பை கொடுப்பதற்கு ஒருவனும் தேவனுக்கு உகந்த பாதிரமாக இருக்கவில்லை. "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." இது தேவனுடைய கிருபை. அவருடைய ஈவு. "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல". அந்த ஈவை பெற்ற பின்பும், யாவரும் அதற்கு பாத்திரர்களாக நடந்து கொள்கின்றார்களா? தேவ ஊழியராகிய பவுல் தாமே: எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகமாத்திரம் நடந்துகொள்ளுங்கள் என்று பிலிப்பி சபையோரை வேண்டிக் கொண்டத்தை முதலாம் அதிகாரத்திலே பார்த்தோம். நீங்கள் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு பாதிரர்களாக நடந்து கொள்கின்றீர்களா? என்று சற்று உங்களையே நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். எத்தனை முறை மனம்வருந்தி மன்னிப்பை கேட்டுக் கொண்டீர்கள்? மன்னிப்பு கேட்டுக் கொள்வது உங்கள் வாழ்விலே முடிவடைந்து விட்டாதா? எனவே, பாத்திரம் அறிந்து உதவி செய்ய வேண்டும் என்னும் கருத்தை குறித்து உண்மையும் நீதியுமுள்ளவர்களாக இருங்கள். சீக்கிரமாய் நியாயந்தீர்க்காமல் நீங்கள் பெற்றுக் கொண்ட இரக்கத்தை காண்பிபுங்கள்.

**ரோமர் 3:23-24**

எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உதவி செய்யாமல் இருப்பதற்கு காரணங்களை தேடுகின்றவனாக நான் இருக்காமல், உம்மைப்போல மாற எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறஸ்துவுக்காய் இழந்தவர்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவன், கர்த்தருடைய நாமத்திலே, பற்பல தானதர்மங்களை செய்து வந்தான். தானதர்மங்களை செய்யாமல் இருப்பதற்கு காரணங்களை தேடி நேரத்தை விரயப்படுத்தாமல், எப்போதும் உதவி செய்ய ஆயத்தமுள்ளவனாக இருந்தான். இந்த செயற்பாடுகள் அவனுடைய ஜெபத்திலும் வேண்டுதலிலும் இருந்து வந்தது. ஆண்டுகள் கடந்து செல்லும் போது, ஒரு சிலர் அவன் செய்த உதவிகளை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்பதை அறிந்து கொண்டான். வேறு சிலர், பொய்களை கூறி உதவிகளை பெற்றிருந்தார்கள் என்று கேள்விப்பட்டான். இன்னும் சிலர், பெற்ற உதவிகளை குறித்து நன்றியற்றவர்களாக இருப்பதை கண்டு கொண்டான். ஆனால், உதவிகளை பெற்றவர்களில் கணிசமானவர்களுடைய வாழ்க்கை மாற்றப்பட்டத்தையும், அவர்கள் தேவ பயத்தோடு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும் அறிந்து கொண்டான். ஆனால், கர்த்தருடைய நாமத்திலே உதவிகளை செய்வதே அந்த விசுவாசியானவனுடைய செயற்பாடுகளின் கருபொருளாக இருந்தது. தேவ இரக்கத்தை பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, 'கிறிஸ்துவுக்காய் இழந்தவர்கள் எவரும் தரித்திரராவதில்லை. ராஜ்ய மேன்மைக்காய் கஷ்டப்பட்டோர் நஷ்டப்பட்டதில்லை' என்று ஒரு அழகான பாடலின் வரிகள் அமைக்கப்பட்டுள்ளது. பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில்அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான் என்று ஆண்டவர் இயேசு கூறிய உவமையை அறிந்திருக்கின்றீர்கள். கோதுமைக்குள் களைகள் விதைக்கப்பட்டதால், கோதுமைக்கு தண்ணீரும் பசளையும் போடாமல், அவற்றை பராமரிக்காமல் விட்டுவிடுவது சரியாகுமோ? கோதுமையை பராமரிக்கும் போது, களைகளும் தண்ணீரையும் பசளையையும் பெற்றுக் கொள்ளும் அல்லவோ? எனவே, உங்கள் நன்மையான நல்மனதை துஷ்பிரயோகம் செய்கின்றவர்களின் நிமித்தம் சோர்ந்து போகாமல், நன்மையை செய்யுங்கள். பரலோகத்திலே பலன் மிகுதியாயிருக்கும்.

**மாற்கு 9:41**

**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**ஜெபம்:** நன்மையின் ஊற்றாகிய என் தேவனே, நன்மைகள் செய்வதில் நான் ஒருபோதும் இளைப்படைந்து போகாதபடிக்கு, உம்முடைய கிருபையை எனக்கு தந்து என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய கிரியையிலே பெருகுங்கள்

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." இந்த ஜீவ வார்த்தைகள் வழியாக, இரட்சகர் இயேசுவின் தூய இரத்தம் எல்லா மனிதர்களுக்காகவும் சிந்தப்பட்டது. ஆனால், எல்லோரும் அவரை ஏற்றுக் கொண்டார்களா? சிலர் அவரை ஏற்றுக் கொண்டிரு க்கின்றார்கள். வேறு சிலர் அவரை அறிந்தும் அலட்சியம் செய்து வருகி ன்றார்கள். இன்னும் சிலர் தங்கள் மனக்கடினத்தினாலே எப்போதும் அவருக்கு எதிர்த்து நிற்கின்றார்கள். அவரை கொண்டவர்களில் சிலர் பின்வாங்கி போயிருக்கின்றார்கள். அதனால் இரட்சகர் இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தம் விரயமாயிற்றோ? அவருடைய சிலுவை மரணம் காரணம் இழந்து வீணாய் போயிற்றோ? இல்லை. இரட்சகர் இயேசுவின் இரத்தம் விலையேறப்பெற்ற ஜீவ இரத்தம். "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது." இரசகர் இயேசுதாமே, பிதாவாகிய தேவனுடைய திருச்சித்ததை பூரணமாக நிறைவேற்றி முடித்தார். மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்து, வெற்றி சிறந்தார். அதுபோலவே, ஆண்டவர் இயேசுவின் சிந்தையை தரித்தவர்களுடைய நற்கிரியைகள் வீண் போவதில்லை. ஒருவேளை, சிலர் உங்களுடைய நற்சுபாவங்களை துஷ்பிரயோகம் செய்யலாம், வேறு சிலர், நீங்கள் நன்மை செய்ய நாடும் போது, உங்களுக்கு எதிர்த்து நிற்கலாம். இன்னும் சிலர், நன்றியற்றவர்களாக இருக்கலாம். ஒரு சிறுகுழுவினர் உங்களை ஏற்றுக் கொண்டு, நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் நீங்கள் படும் பிரயாசங்கள் ஒருநாளும் வீண் போவதில்லை. எனவே, பிதாவாகிய தேவனுடைய சித்த்ததை செய்வதிலே சோர்ந்து போகாமல் இருங்கள். பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

**1 கொரிந்தியர் 15:58**

கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ளதேவனே, மனித இதயத்திற்கு செம்மையாக தோன்றும் வழிகளை நான் நோக்காதடிக்கு, நீர் காட்டிய வழியை என் கண்ணிமைகள்செவ்வையாய் பார்க்கும்படிக்கு,பிரசாசமுள்ள மனக்கண்ணை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்கள்

ஒரு தகப்பனானவனுக்கு ஐந்து குமார்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தன் தகப்பனானவரின் ஆலோசனையை தள்ளி, தன் கண்போன வழியிலே வாழ்ந்து தன் வாழ்க்கையை கெடுத்துக் கொண் டிருந்தான். தன் சொந்த வீட்டைவிட்டு தூரத்திலுள்ள ஊரிலே வாழ்ந்து வந்த அவன் தான் வாழ்ந்து வந்த ஊரிலே பலரிடம் கடன்பட்டு, அவைகளில் இருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். அவனைக் குறித்து துக்கமடைந்த தகப்பனானவர், தன்னுடைய மூத்த குமாரனை நோக்கி: நீ போய் உன் சகோதரனை அவன் கட ன்களிலிருந்து விடுவித்து, வீடு வந்து சேரும்படிக்கு, அவனுக்கு வழிகாட்டும் படி கூறி, அவனுடைய தம்பி இருந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். அவன் தன் இளைய சகோதரன் வாழ்ந்த ஊரு க்கு சென்று, அங்கு தன் தம்பியின் வாழ்க்கை முறையை பார்த்தான். அவனோடு பேசினான். தம்பியினுடைய மனநிலையை அறிந்த போது, இவனுக்கு உதவி செய்வதிலும், தெருவிலுள்ள ஒரு ஏழைக்கு உதவி செய்யலாம் என்று கூறி, திரும்பி தன் ஊருக்கு வந்து விட்டான். இந்த சம்பத்திலே, யார் தன் தகப்பனுடைய ஆலோசனையை கேட்டு, மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும் அதை நிறைவேற்றினார்கள்? இளையவன் தன் தகப்ப னானவனுடைய ஆலோசனையை தள்ளி, துன்மார்க்கமான வாழ்க் கையை தெரிந்து கொண்டான். மூத்தவனும், தன் தகப்பனானவருடைய ஆலோசனையைத் தள்ளி தன் இருதயத்தை கடினப்படுத்தி, சுய விரு ப்பத்தின்படி நடந்து கொண்டான். இவர்கள் இருவருக்கும் கிறிஸ்து விலிருந்த சிந்தை இருக்கவில்லை. இன்று சில குடும்பங்களிலே, சில சபைகளிலே ஏற்படும் கலகங்களுக்கு, பிரிவினைகளுக்கு இதுவே அடி ப்படைக் காரணமாக இருக்கின்றது. கிறிஸ்துவின் சிந்தையில்லாதவன், கிறிஸ்தவனாக வாழ முடியாது. கிறிஸ்துவின் பணியை செய்ய முடி யாது. ஆண்டவராகிய இயேசு தாமே, “தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண் ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரிய ந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” மீட்புக்கு பாத்திரரல்லாத நாம் தேவனுக்கு உகந்த பாத்திரங்களாக மாற்றும்படிக்கு, தம்மைத் தாழ்த்தினார். அத்தகைய சிந்தையிலே வளர்ந்து பெருகுங்கள்.

**பிலிப்பியர் 2:7**

**தம்மைத்தாமே வெறுமை யாக்கி, அடிமையின் ரூப மெடுத்து, மனுஷர் சாய லானார்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, ஒன்றும் உதவாவதன் என்று என்னைத் தள் ளிவிடாமல், உம்முடைய சாயலிலே வளரும்படி தெரிந்து கொண் டீரே! நான் அந்த உணர்வு என்னில் வளர்ந்து பெருகி கனி கொடுக் கும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சாயலிலே பெருகுங்கள்

தேவ ஊழியராகிய பவுல், சிறையிலிருந்து, பிலிப்பு பட்டணத்திலுள்ள சபைக்கு எழுதிய நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்தை தியானித்து வருகின்றோம். அவர் கிறிஸ்துவின் சிந்தையை தரிப்பதின் அவசியத்தை கிறிஸ்துவை பின்பற்றுகின்றவர்களுக்கு வலியுறுத்தி கூறியிருக்கின்றார். இந்நாட்களிலே, தபசு காலம் என்று பலர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும்படி பல ஒறுத்தல்களையும் தானதர்மங்களையும்செய்துவருகின்றார்கள். அவைகளிலே நன்மை உண்டு. விசுவாசிகள் மாத்திரமல்ல, இந்த உலகத்திலுள்ள பல மனிதர்கள் பெருமளவிலே செய்து வருகின்றார்கள். விசுவாசிகளாகிய நாம், நாம் தாபரிக்கும் ஊராகிய பரம தேசத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும். மனமாற்றம் வேண்டும். மறுரூபமடைய வேண்டும். எனவே, தானதர்மங்கள், ஒறுத்தல்கள், உபவாசங்களோடு நின்று விடாமல், மேலானவைகளை நாடுங்கள். யாரும் காணாதமுடியாத எங்கள் உள்ளந்தரியத்தை, தேவனாகிய கர்த்தர் ஆராய்ந்தறிகின்றார். சிலருடைய மனதிலே கசப்பு என்ற விஷம் கலந்திருக்கலாம். வேறு சிலர், சிலரைக் குறித்த வன்மம், பகை, பிரிவினை போன்றவற்றை தகுந்த காரணங்களை காட்டி உள்ளே வைத்திருக்கலாம். விட்டுவிட முடியாத கோபம், எரிச்சல், பொறாமை போன்ற மாம்ச இச்சைகள் உள்ளே மறைந்திருக்கலாம். இன்னும் பற்பல மாம்ச சிந்தைகள் அவ்வப்போது தலைதூக்கி விடாமல். பரலோகத்திலிருக்கின்ற பரமபிதா தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையான ஈவுகளை அருளுகின்றார். தம்முடையவர்களை பெலப்படுத்தி வழிநடத்தும் தம்முடைய தூய ஆவியை கொடுத்திருக்கின்றார். பெலவீன நேரங்களிலே கிருபை அளிக்கின்றார். நம்மால் விட முடியாமல் இருக்கும் சுபாவங்களைவிட்டுவிட அவர் போக்கை உண்டு பண்ணுகின்றவராக இருக்கின்றார். எனவே, ஆண்டவர் இயேசுவின் பாடுகளை நினைவு கூரும் இந்த நாட்களிலே, அவரைப் போல மாறும் படிக்கு, உங்கள் உள்ளத்தை முற்றும் முழுவதுமாக ஒப்புக் கொடுங்கள். இப்படியாகவே தேவ ஊழியராகிய பவுல் கிறிஸ்துவை பின்பற்றினார். அதைப் போலவே நாமும் கிறிஸ்துவை பின்பற்றும்படி நமக்கு ஆலோசனை கூறியிருக்கின்றார். அந்தப்படி நாம் கிறிஸ்துவின் சாயலிலே வளர்ந்து பெருகுங்கள்.

**1 கொரிந்தியர் 11:1**

**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.**

**ஜெபம்**:கிறிஸ்துவின் சாயலிலே வளரும்படி என்னை அழைத்த தேவனே, வேதனை உண்டாக்கும் வழிகள் என்னிடத்தில் இருந்தால், அவைகளை உணர்த்தி, விட்டுவிடும்படியான போக்கை எனக்கு உண்டுபணும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ‘மங்கலான வெளிச்சம்’

ஒரு வாலிபனானவன், தன் அறைவீட்டிற்குள் இருந்த மின்குமுலின் வெளிச்சத்தை தணித்து, மங்கலான வெளிச்சத்திலே தன் அறைவீட்டை அழகாக ஒழுங்கு படுத்தியிருந்தான். இரவிலோ அல்லது பகலிலோ அந்த அறையை பார்க்கும் போது, அழகாகவும் ஒழுங்காகவும் காட்சி யளித்தது. ஒரு நாள் அந்த அறைவீட்டிற்குள் சில திருத்த வேலைகளை செய்யும்படிக்கு, தகப்பனானவர், பிர காசிக்கின்ற வெளிசமுள்ள மின்கு முலை போட்ட போது, அந்த அறை யிலே எவ்வளவாய் தூசி படிந்திரு ப்பதை கண்டு ஆச்சரியப்பட்டார். அந்த அறையிலிருந்து குறைகள் யாவும் அந்த வெளிச்சத்திலே தெளிவாக தெரிந்தது. பிரியமான சகோதர சகோதரிகளிலே, ஒளியையும், இருளை யும் பற்றி பேசும் போது, உடடி னாயாக விசுவாசிகள், உலகத்தார் இருளிலே வாழ்கின்றார்கள் என்றும், தாங்கள் ஒளியிலே இருக்கி ன்றோம் என்றும் சொல்லிக் கொள்வார்கள். விசுவாசிகள் மெய்யான ஒளியை அறிந்திருக்கின்றார்கள். ஆனால், சிலரோ, அந்த ஒளியானது தங்கள் வாழ்விலே பிரகாசிக்காதபடிக்கு, விளக்கை தணித்து விடுகின்றார்கள். ஏன் அப்படி தணித்து விடுகின்றார்கள்? “ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவை களாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியை ப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகை க்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வரு கிறான்” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். நம்முடைய பரமபிதாமங்கி எரியும் திரியை அணைத்து விடுகின்றவர் அல்ல. மாறாக அது வெளிச்சம் வீசும்படி சுத்திகரிக்கின்றார். தேவனாகிய கர்த்தர் விளம்பிய வேதமே நம்முடைய வாழ்வின் வெளிச்சமாக இருக் கின்றது. வேதத்தை வாசிக்காமல், அந்த வார்த்தைகளை மறந்து போகி ன்றவர்கள், தங்கள் வாழ்வின் விளக்கை தணித்து விடுகின்றார்கள். நீங்கள் அப்படி இருக்காமல், வார்த்தையின் வெளிசத்திலே நடக்க உங்களை ஒப்புக் கொடுங்கள். வேதத்தை அனுதினமும் வாசித்து, தியானியுங்கள். உங்கள் வாழ்க்கை அந்த வெளிச்சத்திலே ஆராய்ந்து பாருங்கள். நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்.

**யோவான் 8:12**

**என்னைப் பின்பற்றுகிற வன் இருளிலே நடவா மல் ஜீவஒளியை அடைந் திருப்பான் என்றார்.**

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற எங்கள் தேவனே, என் கால்களுக்கு தீப மும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கின்ற உம்முடைய வேதத்தை நான் பின்பற்றி நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெரியவன் யார்?

வேலை செய்யும் இடங்களிலே, தாழ்விடங்களிலிருந்து, உயர்ந்த ஸ்தானங்களுக்கு ஏறிச் செல்பவர்கள், தங்கள் உயர்ந்த நிலையை குறித்து மேன்மை பாராட்டுவார்கள். தாங்கள் இருந்து வந்த தாழ்விடங்களிலே தற்போது இருப்பவர்களை மேட்டிமையான கண்களோடு பார்க்கின்றார்கள். வாழ்க்கை தரத்திலே, தங்களுக்கும் அவர்களுக்கும் இடையிலே நெருங்கமுடியாத இடைவெளிகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். அதற்கு பற்பல நியாயங்களையும் கூறிக் கொள்வார்கள். இதுதேவ ஆசீர்வாதம் என்று சொல்லிக்கொள்கின்றார்கள். இப்படியான மனநிலைமையானது ஏற்புடையதா என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட நிலைமையானது, சில இடங்களிலே, தேவ ஊழியர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சிலரிடத்திலும், அங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. சிலர், மூப்பர், மேய்ப்பர், போதகர், சுவிசேஷகர், தீர்க்கதரிசி, அப்போஸ்தலர் என்று படிகளிலே ஏறிச் செல்வதைப் போல, தங்கள் ஆசனங்களை உயர்த்திக் கொள்கின்றார்கள். கர்த்தராகிய இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களுடைய "கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்." என்று மனத்தாழ்மையையும், கீழ்படிவையும் கற்றுக் கொடுத்தார். ஒருவரும் ஏறிப்போகமுடியாத உன்னதமான உயர்விடத்திலே இருந்த ஆண்டவராகிய இயேசு தாழ்விடத்திற்கு இறங்கி வந்தார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்." ஆனால், கிறிஸ்துவின் சிந்தையை தரிக்க வேண்டும் என்று கூறுகின்றவர்கள் சில வேளைகளிலே இந்த சத்தியத்தை மறந்து போய்விடுகின்றார்கள். நீங்களோ கிறிஸ்துவின் சிந்தையிலே வளர்ந்து பெருகுங்கள்.

**சங்கீதம் 138:6**

கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவைப் போல மனத்தாழ்மையும், கீழ்படிவும் உள்ளவனாக வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ‘தாழ்மையிலே மனமில்லாதவர்கள்’

திரளான செல்வம், உயர்ந்த கல்வி, உலகத்தின் செல்வாக்குகள் போன்றவற்றிலே மனிதர்கள் மேன்மை பாராட்டுகின்றார்கள். விசுவரிகள் யாவரும், இவற்றிற்கு முற்றிலும் விதிவிலக்கானவர்கள் என்று கூறிவிட முடியாது. இன்று மட்டுமல்ல, சபையின் ஆரம்பகாலத்திலேயே இத்தகைய தன்மைகள் விசுவாசிகள் மத்தியிலே காணப்பட்டது. அக்காலத்திலே, தேவ ஊழியராகிய யாக்கோபு,விசுவாசமார்க்கத்தாரை நோக்கி: என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக. ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும் தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா? என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? நீங்களோ தரித்திரரைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்? உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்? உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள். பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்” என்று கூறியிருக்கின்றார். இப்படிப்பட்ட வேற்றுமைகள் ஒரு விசுவாசிகயின் மனதிலே வளரும் போது, ஒருவேளை அவன் உலக ஐசுவரியமுள்ளனாக இருக்கலாம். ஆனால் அவனுடைய மனமேட்டிமையினால் அவன் தன்னை ஆவிக்குரிய வறுமைக்கு ஒப்புக் கொடுக்கின்றவனாக இருக்கின்றான். நீங்கள் நற்கிரியைகளிலே வளர்ந்து பெருகின்றவர்களாக இருங்கள்.

**1 தீமோத்தேயு 6:18**

**நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும்**,

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உமக்கு முன்பாக நான் தெய்வீக சுபாவத்திலே தரித்திரனாக காணப்படாதபடிக்கு, பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மாறாத தேவனின் பிள்ளைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், எல்லா விதத்திலும் சமுதாயத்தினாலே தள்ளப்பட்டிருந்தான். அவனிடம் துன்மார்க்கமான பழக்கவழக்கங்களும் இருந்தது. உலகத்திலே வாழ்ந்து வந்த மனிதர்கள் அவனை ஒரு பொருட்டென்று எண்ணவில்லை. அவன் தன் வாழ்வின் அழிவின் பாதையிலே சென்றுகொண்டிருக்கும் போது, ஒருநாள், ஆண்டவர் இயேசு அவனை சந்தித்தார். அவன் வாழ்க்கை மாற்றப்பட்டது. தன் வாழ்க்கையிலே புதிய அர்த்தத்தை கண்டு கொண்டான். இரட்சிப்பின் சந்தோஷத்தை அடைந்து கொண்டான். ஊரிலே சபை ஐக்கிமொன்றிலே இணைந்து கொண்டான். அந்த சிறிய சபையிலே எளிமையான வாழ்க்கை வாழ்ந்த விசுவாசிகள் அவனை ஏற்றுக் கொண்டு அன்பு செய்தார்கள். தேவனுக்கென்று ஊழியம் செய்ய வேண்டும் என்று தன் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்தான். ஆண்டுகள் கடந்து சென்றபின்பு, ஊர் மக்கள் மத்தியிலே கனத்தை பெற்றுக் கொண்டான். காலங்கள் கடந்து சென்ற பின்பு, தன்னை தள்ளி வைத்த உலகதை மறந்து, அற்பமாக எண்ணப்பட்ட காலங்களிலே தன்னை நேசித்த சபையோரை மறந்து, உலகிலே செல்வாக்கோடு வாழ்கின்றவர்களின் நட்பை மேன்மைப் படுத்தினான். தேவனுடைய ஊழியன் என்று தன்னை அறிமுகப்படுத்துவதைவிட, ஊரிலுள்ள இன்னாருக்கு நான் அறிமுகவானவன் என்பதை மேன்மையாக எண்ணிக் கொண்டான். தேவனை அறிந்தும் உணர்வற்றனாக மாறிவிட்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த மனிதனுடைய பரிதாபமான நிலைமையை சற்று சிந்தித்துப்பாருங்கள். இதற்கொத்த நிலைமைகளை நீங்கள் உங்கள் வாழ்க்கை அனுபவத்திலே கண்டிருக்கலாம். நம்முடைய பிதாவாகிய தேவன் தம்முடைய சுபாவத்திலே மாறிப் போகின்றவர் அல்லர். அவருக்கு பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்ட நாமும், அவரைப் போலவே வாழ வேண்டும். ஒருவேளை சுற்றியிருக்கின்ற மனிதர்கள், சக விசுவாசிகள் மாறிப்போனாலும், அவர்கள் தங்கள் வாழ்விலே நன்றியறிதலுள்ளவர்களாக இருக்காவிட்டாலும், அவர்கள் நிமித்தம் நாம் சோர்ந்து பின்வாங்கி, நற்கிரியைகளில் ஓய்ந்து போய்விடக்கூடாது. அவர்களுக்கு பாடம் படிபிக்க வேண்டும் என்று எங்களுக்கிருக்கும் உலக மேன்மைகளை மறுபடியும் நாம் தலைக்கு மேலாக உயர்த்திவிடக் கூடாது. தேவன் அழைத்த அழைப்பின் மேன்மையிலே தரித்திருக்க வேண்டும். நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

**கலாத்தியர் 6:9**

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக;

**ஜெபம்**: நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனே, நீர் எனக்கு தந்திருக்கும் மேன்மையான அழைப்பை ஒருபோதும் மறந்து போகாலும், அற்ப காரியங்களுக்காக அதை இழந்து போகாமல் இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனத்தாழ்மையுடையவர்களாக இருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவனின் தகப்பனானவர் நோய் வாய்பட்டு வைத்திய சாலையிலே அனுமதிக்கப்பட்டிருந்தார். அவனுடைய உற்றார் உறவினர்கள் செல்வாக்குள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால், ஏதோ காரணத்திற்காக அந்த வாலிபனுடைய குடும்பத்தை தள்ளிவிட்டார்கள். அவனுடைய குடும்பம் வறுமைக்கோட்டிற்குள் வாழ்ந்து வந்தபடியால், அவனுடைய தகப்பனானவருடைய இறுதி நாட்களிலே, அவருக்கு தேவையான ஊட்டச்சத்துள்ள உணவைக் கொடுக்கக்கூட அவர்களுக்கு முடியாமல் இருந்தது. உற்றார் உறவினர் எவரும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கவில் லை. ஆண்டவர் இயேசு அந்த வாலிபனை சந்தித்தார். அவன் வழியாக அவனுடைய குடும்பத்தாரின் நிலைமையை மாற்றினார். ஆண்டுகள் கடந்து சென்று அவர்களுடைய குடும்ப நிலைமைகள் நன்மைக்கேதுவாக மாற்றம் கண்டபோது, இவர்களை தள்ளி வைத்த உற்றார் உறவினர், சொந்தம் கொண்டாடும்படி வழி தேடினார். அவர்களுடைய உற்றார் உறவினர், அவர்களை அல்ல, அவர்களுக்கு தற்போது ஏற்பட்டிக்கும் அந்தஸ்த்தையே விரும்பினார்கள். அந்த வாலிபனோ, தன் மனதிலேமேட்டிமையடையாமலும், மனமேட்டிமையுள்ளவர்களோடு இசைந்து போகாமலும், தாழ்மையுள்ள இருதயத்தோடு, வறியர்கள், எளிமையான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு ஆதரவாய் இருந்து வந்தான். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, ஒரு வேளை உங்கள் குடும்பத்திலே கல்வி, செல்வாக்கு பெருகும் போது, உங்களை தள்ளி வைத்தவர்கள் உங்களோடு உறவு கொண்டாட முற்படுவார்கள். அதேபோல, உங்கள் குடும்பத்தின் நிலைமையாகனது தாழ்ந்து போனால், பலர் உங்களைவிட்டு தங்களைத் தூரப்படுத்திக் கொள்வார்கள். நீங்களோ, உங்கள் தாழ்மையின் நாட்களிலே உங்களை ஆதரித்தவர்களை மறந்து போய்விடாதிருங்கள். பொருளாதார நிலைமைகள் உயரும்போது, ஏழை எளியவர்களை மறந்து போய் விடாதிருங்கள். இன்னும் அதிகமாக அவர்களை தாங்குங்கள். பூலோகத்திலுள்ளவைகளையல்ல, பரலோகத்திலுள்ள மேன்மையானவைகளை நாடுங்கள். இந்த பூமியிலே பொக்கிஷங்களை சேர்த்து வைக் காமல், பரலோகத்திலே உங்கள் முதலீடுகளை அதிகமதிகமாக செய் யுங்கள். பரம பிதாவைப்போல இரகத்திலே ஐசுவரியமுள்ளவர்களாக இருங்கள்.

**எபேசியர் 4:2**

**மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,**

**ஜெபம்:** தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கின்ற தேவனே, நீர் எனக்கு தந்த மேன்மையான வாழ்வை மறந்து போகாமல், திவ்விய சுபாவங்களிலே வளர எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ராஜரிக பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்

சில ஆண்டுகளுக்கு முன், இந்த உலகிலே கொள்ளை நோயானது, கொடிதாக இருந்த நாட்களிலே, "ஐரோப்பியாவிலே இருந்த குறிப்பிட்ட ஒரு நாட்டிலே, அநேகர் அந்த நோயினால் பீடிக்கப்பட்டு, மரித்துக் கொண்டிருந்தார்கள். அந்நாட்களிலே, மத்திய அமரிக்காவிலிருந்த ஒரு நாட்டிலே, தேவனை அறியாத வைத்தியர்கள், தாதிகள் அடங்கிய குழுவொன்று, தங்கள் உயிரை பொருட்படுத்தாமல், ஐரோப்பியாவிலுள்ள அந்த நாட்டிலுள்ளவர்களுக்கு உதவும்படி கடந்து சென்றார்கள் என்பதை செய்திகள் வாயிலாக கேள்விப்பட்டோம்." கடந்து சென்றவர்கள் சுகதேகிகள். தாங்கள் வாழ்ந்து வந்த வழமையான வாழ்க்கையை விட்டு, தாங்கள் அறியாத நோயாளிகளுக்கு உதவும்படி கடந்து சென்றார்கள். நாமும் அந்த மட்டத்திலே தியாக ங்களை செய்ய வேண்டும் என்பது கருப்பொருள் அல்ல. ஆனால், இன்றைய நாட்களிலே விசுவாசிகள் என்று தங்களை சொல்லிக் கொள்பவர்கள், தங்களுக்கு ஆசீர்வாதமான வாழ்க்கை வேண்டும் என்கின்ற மன நிலையுடையவர்களாக இருந்து, தங்கள் வசதிகளை குறித்து மேன்மை பாராட்டி, அதை சாட்சியாக கூறுகின்றவர்களாக இருக்கின்றார்கள். உலகத்திலுள்ள தேவனை அறியாத மனிதர்கள் செய்யும் தியாகத்தின் ஒரு சிறு பகுதியைக்கூட செய்வதற்கு தயக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். தங்கள், குடும்பம், தங்கள் வீடு, தங்களுடைய கல்வி, தங்களுடைய வேலை, தங்கள் வீட்டிலுள்ள பிறந்த நாள், திருமண நாள் கொண்டாட்டங்கள், உல்லாசப் பயணங்கள், வருங்காலத்திற்கான சேமிப்புகள் என்று, அவையாவும் நிறைவான பின்னதாகவே, மற்றவர்களை குறித்த எண்ணமுடையவர்களாக இருக்கின்றார்கள். கிறிஸ்துவின் சிந்தையைக் குறித்து தியானித்து வரும் இந்த நாட்களிலே, பிலிப்பியருக்கு பவுல் எழுதிய இரண்டாம் நிருபத்தின் கருப்பொருளை அறிந்து கொள்ளுங்கள். முதலாவதாக விசுவாசிககள் மத்தியிலே தங்கள் மேலான அழைப்பைப் குறித்ததான ஐக்கியம் இருக்க வேண்டும். விசுவாசிகள் தங்களுக்கானவைகளை மட்டும் நோக்காமல், பிறருக்கானவைகளையும் நோக்க வேண்டும். அவற்றை தேவன் விரும்பும்படி செய்து முடிக்கும்படி, தேவை ஏற்படும் போது, சுகபோகங்கள், வசதிகள், வழமையான வாழ்க்கை முறையைவிட்டு தியாகங்களளை செய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

> **யாக்கோபு 2:8**
>
> உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.

**ஜெபம்:** அன்பும் இரக்கமுமுள்ள தேவனே, என் வாழ்க்கையிலே நன்மை நடக்க வேண்டும் என்று எண்ணுகின்ற பிரகாரமாக மற்றவர்களுக்கும் நான் நன்மை செய்யும் உள்ளத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிரியைகளிலே காண்பியுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், அந்த தேசத்தின் அரசாங்கத்தின், சுகாதார அமைச்சினால் நடத்தப்படும், சுகாதார நிபுணருக்கான பயிற்சியிலும், பரீட்சையிலும் தேர்ச்சியடைந்து, உத்தியோகபூர்வமான சுகாதர நிபுணர் என்னும் பட்டத்தை பெற்றுக் கொண்டான். அவன் தன் ஊருக்கு திரும்பிய போது, அவனுடைய வாழ்க்கை முறையானது மாற்றமடைந்துது. மனிதர்கள் முன் ஒரு வேஷம், வீட்டிலே இன்னுமொரு வேஷம் என்ற பிரகாரமாக வாழாமல், தான் கற்றுக் கொண்டவைகளை, தன் வாழ்விலும், தன் குடும்பத்திலும் உண்மையிலேயே கடைபிடித்து வந்தான். அவனுடைய பேச்சுக்கும் வாழ்க்கைமுறைக்னும் சம்பந்தம் இருந்ததால், அந்த ஊரிலே வாழ்ந்த பெரியவர்களும், சிறியவர்களும் அவனை கனப்படுத்தி, அவன் உண்மையிலே ஒரு சுகாதார நிபுணர் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். இந்த சம்பவத்தை மனதில் வைத்தவர்களாக, பின்வரும் கருத்துக்களை சிந்துப் பாருங்கள். நீங்கள் கிறிஸ்து இயேசுவின் வழியான உண்டான இரட்சிப்பை பெற்றுக் கொண்டீர்களா? நீங்கள் தேவனாகிய கர்த்தருடைய விசுவாசிகளா? ஆண்டவர் இயேசுவின் சீஷர்களாக? பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளா? அப்படியானால், நீங்கள் பெற்ற இரடசிப்பானது உங்கள் நடை, உடை, பாவனையிலே வெளிப்படத்தப்படுகின்றதா? கிருஜபயையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக் கொண்ட அருமையான சகோதர சகோதரிகளே, வீட்டிலும், சபையிலும், ஊரிலும், இரட்சிப்பின் தெய்வீக சுபாங்களை மனதார வெளிப்படுத்துறீர்களாக? இரட்சிப்பு அடைந்த நாட்களுக்கு முன் இரு ந்து மாம்ச இச்சைகள் இன்னும் அந்தப்படியே இருக்கின்றதா? சிறை யிலிருந்த தேவ ஊழியராகிய பவுல் பிலிப்பு சபையோருக்கு எழுதும் போது, நீங்கள் ஐக்கியமுள்ளவர்களாக இருந்தால், பிறரை குறித்து நோக்கமுள்ளவர்களாக இருந்தால், நீங்கள் உண்மையிலே கிறிஸ்து வின் சிந்தையை தரித்திருந்தால், தேவ பயத்தோடு, பயபக்தியுள்ளவர்களாக, கீழ்படிவோடு கூட, உங்கள் இரட்சிப்பை உறுதி செய்யும் கனிகள் உங்கள் வாழ்க்கையிலே வெளிப்படட்டும் என்று கூறியி ருக்கின்றார். அந்த தெய்வீக கனிகள் வெளிப்படுமம்படி, கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக, கிறிஸ்துவுக்குள் பிரயாசப்பட வேண்டும். உங்கள் சிந்தனையும், சொல்லும், செயலும், தேவனுக்கு பிரியமுள்ளதாக இருப்பதாக. வாழ்க்கையானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவதாக.

**பிலிப்பியர் 2:12**

அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.

**ஜெபம்**: கிருபையினாலே என்னை தாங்கி வழிநடத்தும் தேவனே, நான் பெற்றுக் கொண்ட இரடச்சிப்பானது என் வாழ்க்கையில் பிரதிபலிக்கும்படிக்கு உண்மையும் உணர்வும் உள்ள இருதயத்தை தந்த வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குறித்த நேரம்வரை காத்திருங்கள்!

பொதுவாகவிசுவாசிகள் தேவ ஆசீர்வாதங்களை பற்றிப் பேசும் போதும், அவைகளை நாடும் போதும், வேதத்திலுள்ள முற்பிதாங்களையும், முன்னோடிகளாயிருந்து கடந்து சென்ற பரிசுத்தவான்களையும் குறிப்பிட்டு கூறிக் கொள்வார்கள். எடுத்துக்காட்டாக, வேலையிலே உயர்வு வர வேண்டும்என்று விரும்பும் போது, யோசேப்பு, தானியேல் போன்ற பாத்திரங்களை குறித்து பேசிக் கொள்வார்கள். ஆனால், தோத்தான் என்னும்இடத்திலுள்ள குழியிருந்து, எகிப்திலுள்ள பார்வோனின் அரண்மனைக்கு செல்லும்வரை, வாலிபனாகிய யோசேப்பு, மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும், எத்தனை ஆண்டுகள் நீடிய பொறுமையுள்ளவனாக இருந்தான் என்பதை சிந்தித்துப் பார்ப்பதில்லை. பெரிதான ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளியாக இருப்பதற்கு ஆசை! வாக்குத்தத்தங்களை தங்களுடையதாக்கி கொள்ளும் வாஞ்சை! ஆனால், தேவனாகிய கர்த்தர் முன்குறித்த நேரம் வரும் வரைக்கும் பொறுத்திருக்க மனதில்லை. வாக்குரைத்தவர், சொன்னதை செய்து முடிப்பபார் என்று தங்களை முழுமையாக தாழ்த்தி ஒப்புக் கொடுக்க விரும்பமில்லை. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோ, அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்று எபிரெயர் 12ம் அதிகாரம் 2ம் 3ம் வசனங்களிலே வாசிக்கின்றோம். நாம் கர்த்தருக்குள் படும் பிரயாசம் அனைத்திற்கும் பலன் உண்டு. கிறிஸ்துவுக்காய் இழந்தவர்கள் தரித்திரராவதில்லை. தேவ ராஜ்யத்தின் மேன்மைக்காக கஷ்டங்களை சகித்தவர்கள் நஷ்டப்பட்டுப் போவதில்லை. எனவே, மேன்மையான இலக்கை நோக்கி முன்னேறுங்கள். போகும் பாதையிலே உபத்திரவங்கள் உண்டாகலாம். பள்ளத்தாக்குகள் போன்ற அனுபவங்கள் உண்டாகலமாம். "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன் நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது." ஏன்று கூறியவர் நம்மோடு இருக்கின்றார். எனவே மனந்தளராமல் முன்னேறிச் செல்லுங்கள்.

**எபிரெயர் 10:23**

**வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.**

**ஜெபம்**: நித்திய மேன்மைக்காக என்னை அழைத்த தேவனே, நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கும்படி எனக்கு பெலன் தந்து உம் வார்த்தையின் வழியில் நடத்திச செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிச்சயமாக பலன் உண்டு!

அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, பந்தி விசாரணைக்காக ஏழு பேர் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் ஸ்தேவான் ஒருவனாக இருந்தான். அவன் தன் இளயதிலேயே இயேசு கிறிஸ்துவின் இரத்த சாட்சியாக கல்லெறிந்து கொல்லப்பட்டான். இந்த சம்பவத்தை பரிசுத்த வேதாகமத்திலே, அப்போஸ்தல நடபடிகள் 6ம் 7ம் அதிகாரங்களிலே வாசிக்கலாம். இன்று இப்படியான சம்பவமொன்று ஒரு விசுவாசிக்கு உண்டானால், அவன் உற்றார் உறவினர், அயலவர்கள், ஊரார்கள் என்ன கூறுவார்கள்? தேவன், தேவன் என்று இருந்தானே, சின்ன வயதிலேயே அநியாயமாக மரித்துப் போனானே என்று கூறுவார்கள் அல்லவா? மரணம் என்பது துக்கத்தையும் துயரத்தையும் உண்டு பண்ணும். ஆனால், காலத்திற்கு முன்னாக கொல்லப்படுவது, ஒருவேளை உயிரோடிருக்கின்ற உறவினருக்கு அவமானத்தை உண்டு பண்ணும். ஸ்தேவான் காலத்திற்கு முன் மரித்ததால், அவனுடைய பலன் குறைந்து போயிற்றோ? அல்லது அவன் அடைய வேண்டிய ஆசீர்வாதத்தை அடைய மாட்டானோ? தேவனாகிய கர்த்தர் சிந்தப்பட்ட குற்றமற்ற இரத்தத்தைக் குறித்து விசாரியாமல் இருப்பாரோ? இரண்டு காரியங்களை அறிந்து கொள்ள வேண்டும். முதலாவது: “என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இரண்டாவது: “ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.” எனவே, கர்த்தரால் உண்டாகும் பலன் நிச்சயம். கொஞ்சக் காலம் பாடநுபவகின்ற நீங்கள், தேவனால் உண்டாகும் பலனை நிச்சயமாக அடைந்து கொள்வீர்கள்.

**வெளிப்படுத்தல் 22:12**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.**

**ஜெபம்**: வாக்கு மாறாத தேவனே, துன்பங்கள் துயரங்கள் மத்தியிலும் நான் சோர்ந்து போகாமல், நற்கிரியைகளை நல் மனதுடன் செய்யும்படிக்கு உம் கிருபையினாலே பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தமே அனுதின போஜனம்

> **யோவான் 4:34**
>
> நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

மீட்பராகிய இயேசுதாமே சிலுவையிலே அறையப்பட்ட போது, "அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள் நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான் தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சி க்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்." ஆனாலே தேவ குமாரனாகிய இயேசுவோ, நீடிய பொறுமையுள்ளவராக நிந்தையையும் அவமானத்தையும் சகித்தார். பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதே அவருடைய போஜனமாக இருந்தது. அவர் எல்லாவற்றையும் பிதாவினுடைய சித்தப்படியே நிறைவேற்றி முடித்தார். "ஆதலால் தேவன் எல்லாவற் றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." என்று பிலிப்பியர் 2ம் அதிகாரம் 9ம் வசனதிலிருந்து 11ம் வரை வாசிக்கலாம். அது போலவோ, ஆண்டவராகிய சிந்தையைத் தரித்தவர்களுக்கும், தங்களுக்குரியதை மட்டும் நோக்காமல், பிறருக்கானவைகளையும் நோக்குகின்றவர்களுக்கும், பிதாவாகிய தேவனின் சித்தத்தை தங்கள் வாழ்க் கையில் நிறைவேற்றறுகின்றவர்களை போஜனமாக கொண்டவர்களும். ஒருவரும் அறியாத பரலோக மேன்மைகளை கொடுப்பேன் என்று வாக்குரைத்திருக்கின்றார்.

**ஜெபம்**: உம்முடைய குமாரனுடைய சாயலை அடையும்படி என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்தங்களை கண்டு நான் பின்வாங்கி சோரந்து போகாமல் இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்விலிருந்த சிந்தை

**யோவான் 12:13**

**ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.**

மருத்துவ துறையிலே கல்வி கற்று வந்த மாணவனொருவன், தன் பட்ட படிப்புக்களை முடித்து, மருத்துவ சாலையொன்றிலே மருத்துவராக கடமையாற்றி வந்தான். வசதியாக வாழ்ந்து வந்த அவன், சில ஆண்டுகளுக்குபின், ஒரு குறிப்பிட்ட தேசத்திலுள்ள கிராமொன்றிற்கு சென்று, ஏழை எளியவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். வறுமைக் கோட்டிற்குள் வாழும் அந்த கிராமத்திலே, நோய்களும், கஷ்டங்களும் அதிகமாயிருந்தது. அதனால், அவனுக்கு கஷ்டங்களும், தொற்று நோய்களினாலே பெரிதானநஷ்டமும் உண்டாகும் என்று அவனுடைய உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் ஆலோசனை கூறினார்கள். அவை யாவற்றையும் அறிந்திருந்தும், தனக்குண்டான வசதிகளை துறந்து, வறுமை கஷ்டங்களினால் துயருரும், அந்த மக்கள் நடுவே வாழும்படிக்கு, பயணம் செய்தான். இது ஒரு பெரிதான தியாகம் அல்லவா? நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இந்த பூமியிலே வாழ்ந்த, வாழ்கின்ற, இனிமேலும் பிறக்கப் போகின்ற ஜனங்கள் யாவருக்காவும், பாவ பரிகாரமாக, தம்மை பலியாக ஒப்புக் கொடுக்கும்படி, எருசலேமிற்கு வருகை தந்த நாளை இன்று நினைவு கூருகின்றோம். நாங்கள் மீட்படையும்படி தாம் அடைய வேண்டிய பாடுகள், அவமானம், நிந்தை யாவற்றையும் அவர் அறிந்திருந்தார். “இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள். அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக, இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார். இவைகளை அவருடைய சீ'ர்கள் துவக்கத்திலே அறியவில்லை. இயேசு மகிமையடைந்த பின்பு, இப்படி அவரைக்குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்குச் செய்ததையும் நினைவுகூர்ந்தார்கள்.” ஆதலால், நாமும் இந்த நாளை குருத்தோலை ஞாயிறு என்று நினைவு கூறுகின்றோம். பிரியமானவர்களே, உங்கள் வாழ்விலே தேவ சித்தத்தை நிறைவேற்றும் பாதையிலே, கஷ்டங்கள் நஷ்டங்களை சகிக்க வேண்டி நேர்த்தாலும், கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக இருங்கள்.

**ஜெபம்**: அநாதி ஸ்நேகத்தால் என்னை நேசித்து தேவனே, நானும் கஷ;டங்கள் துன்பங்கள் மத்தியிலும் நான் கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவனாக வாழ எனக்கு உணர்வுள்ள இருயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்கிரியைகளை செய்யும் பெலன்

நாம் பாவத்திலிருந்து மீட்படையும் வழி இல்லாதிருந்தது. இரட்சிப்பானது மனிதர்களுடைய பெலத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தது. அதனால், எந்த நற்கிரியைகளினாலும் அதை மனித பெலத்தினால் செய்து முடிக்க கூடாதிருந்தது. அதனால், பிதாவாகிய தேவன்தாமே, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவரோ, நாம் இரட்சிப்படையும்படிக்கு கிரியைகளை நடப்பித்தார். அதை பிதாவாகிய தேவனுடைய சித்தப்படி நடப்பித்து நிறைவேற்றி முடித்தார். அவராலே நமக்கு இரட்சிப்பு அடையும் வழி உண்டாயிற்று. அது தேவனுடைய கிருபை. அவருடைய கிருபையினாலே, ஆண்டவராகிய இயேசுவே பாவத்தின் பரிகாரி என்று விசுவாசித்து ஏற்றுக் கொண்டதினாலே நாம் இரட்சிப்பை அடைந்தோம். அப்டியானால், கிருபையினாலே இரட்சிப்பு உண்டானதானால், எப்படி அதை கிரியைகளினாலே நிறைவேற்ற முடியும்? ஆண்டவராகிய இயேசு தாமே, தம்மை விசுவாசிக்கின்ற யாவரும் தம்மைப்போல மாறும்படிக்கு, வழியை உண்டு பண்ணியிருக்கின்றார். அவர்தாமே பரலேகத்திற்கு எழுதருளுவதற்கு முன்னதாக, தம்முடைய சீஷர்களை நோக்கி: “பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.” என்றார். ஆம், பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசுவினிடத்திலிருந்த அதே ஆவியானவரை, நம்மோடும் இருந்து சத்தியத்திலே நடத்தும், துணையாளராக பெற்றிருக்கின்றோம். தங்கள் கர்த்தர் மரித்தார் என்று அறிந்த சீஷர்கள், பயந்து, திகிலடைந்து ஒழித்துக் கொண்டார்கள். ஆனால், அவர், உயர்த்து, பரலோகத்திற்கு சென்று, பரிசுத்த ஆவியை அவர்களுக்கு அனுபிய பின்பு, உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு அவர்களை பிரிக்க முடியவில்லை. பரிசுத்த ஆவியை பெற்ற யாவரும் இப்படியான பெலனை பெற்றிருக்கின்றார்கள்.

**யோவான் 14:12**

**என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, நற்கிரியைகளை செய்ய, உம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் என்னில் நீர் உண்டாக்குகிறவராயிருக்கின்றபடியால் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசத்தின் நற்கிரியைகள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே, எப்படியாக தம்முடைய வாழ்க்கையின் நற்கிரியைகள் வழியாக பிதாவாகிய தேவனின் சித்தத்தை தம் வாழ்விலே சம்பூரணமாக நிறைவேற்றி முடித்தார் என்பதையும், நாமும் தம்மைப் போல மறுரூபமாகும்படிக்கு புதிதும் ஜீவனுமான வழியயை ஏற்படுத்தியிருக்கின்றார் என்பதைக் குறித்தும் நாம் கடந்த நாளிலே தியானித்தோம். எனவே, எங்களுடைய உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும். அந்த புதிதாக்குதல், எங்கள் வெளியரங்கமான கனிகளால் சாட்சிபகரப்பட வேண்டும். எங்களுக்கு முன்னோடிகளாக இருந்த, பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள், நியாயாதிபதிகள், தீர்க்கதரிகள் மற்றும் ராஜாக்களும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், எப்படியான விசுவாசத்தின் கரியைகளால் நற்சாட்சி பெற்றார்கள் என்று எபிரெயர் 11ம் அதிகாரத்திலே நாம் வாசிக்கலாம். "விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள் வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள். வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்." பிரியமானவர்களே, பரிசுத்த வாரத்தை நினைகூரும் இந்த நாட்களிலே, அந்த சாட்சிகளின் வாழ்க்கை முறையைத் தியானித்து, நாமும் விசுவாசத்தின் கிரியைகளை வளர்ந்து பெருகுவோமாக.

**எபிரெயர் 12:1**

**விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;**

**ஜெபம்**: பாவ சாபத்திலிருந்து என்னை விடுதலையாக்கிய தேவனே, நான் உம்மிடமிருந்து பெற்றுக் கொண்ட சமாதானத்தை காத்துக் கொள்ளும் படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை வழிநடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.